# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை
# தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2023–2024

**மானியக் கோரிக்கை எண். 23**

# மு.க. ஸ்டாலின்
## முதலமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2023

# பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்கம் எண். |
| --- | --- | --- |
| 1. | முன்னுரை | 1–3 |
| 2. | குறிக்கோள்கள் | 3–6 |
| 3. | வரலாறு | 6–8 |
| 4. | நிருவாக அமைப்பு | 8–11 |
| 5. | அடிப்படை பிரிவு | 11–12 |
| 6. | வள ஆதாரங்கள் இருப்பு | 12–18 |
| 7. | தகவல் தொடர்பு வசதிகள் | 18–24 |
| 8. | பயிற்சி வசதிகள் | 24–26 |
| 9. | தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்களுக்கான கட்டடங்கள் | 27–28 |
| 10. | தீத்தடுப்பு | 28–31 |
| 11. | தீப்பாதுகாப்பு தன்னார்வத் தொண்டர்கள் | 31 |
| 12. | உயர்மாடிக் கட்டடங்கள் மற்றும் மருத்துவமனைகளில் தீத்தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் | 31–34 |
| 13. | கோடைக்காலம் மற்றும் தீபாவளி பண்டிகையின் போது ரோந்துப் பணியில் ஈடுபடுதல் | 34–35 |

| வ. எண். | பொருள் | பக்கம் எண். |
| --- | --- | --- |
| 14. | தீயணைப்புப் பணி நாள் | 35-36 |
| 15. | ஊக்கப்படுத்துதல் மற்றும் ஊக்கத்தொகை | 36-45 |
| 16. | விளையாட்டுப் போட்டிகள் | 45-46 |
| 17. | முன்முயற்சிகள் | 46-52 |
| 18. | நிறைவுரை | 53-54 |
| | அட்டவணை | |

# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள்

# மானியக் கோரிக்கை எண்.23

## கொள்கை விளக்கக் குறிப்பு 2023–2024

### முன்னுரை

தமிழ்நாட்டில் வேகமான தொழில் மயமாக்கலில் வேதிப் பொருட்கள்/அபாயகரமான பொருட்களின் விரிவான பயன்பாடு மற்றும் நகர்ப்புறங்களில் அதிகரித்து வரும் உயர்மாடிக் கட்டுமானங்கள் போன்றவை தீ விபத்துகளால் ஏற்படும் அபாயங்களை அதிகரித்துள்ளது. தீ பாதுகாப்பு என்பது, கட்டடத்திற்கு சரியான தீயணைப்பு வாகன நுழைவு வழி, வெளியேறும் வழிகளுடன் கூடிய கட்டட வடிவமைப்பு, தீ கண்டறிதல் மற்றும் இடர் எச்சரிக்கை ஒலி எழுப்புதல், இடர்காலங்களில் பாதுகாப்பாக வெளியேற்றுதல் மற்றும் தீயை அணைத்தல் போன்ற பல பிரிவுகளைக் கொண்டுள்ளது. எனவே, கட்டடங்கள்

முறையாகப் பாதுகாக்கப்படும் வகையில் மேற்கூறியவைகள் கவனமாக திட்டமிடப்படுதல் வேண்டும். அதிகரித்து வரும் தீ பாதுகாப்பு விழிப்புணர்வுடன் கடுமையான ஒழுங்குமுறை தரநிலைகள் மற்றும் அரசின் முயற்சிகள் ஆகியவை மக்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும், தீயினால் ஏற்படும் குறிப்பிடத்தக்க இழப்பைத் தடுப்பதற்கும் அவசியமாகின்றன. வழக்கமான தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகளுடன் கூடுதலாக இத்துறையின் பங்கு பல ஆண்டுகளாக வியத்தகு முறையில் மாறி, தற்போது தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் கிட்டத்தட்ட எந்த ஒரு/அனைத்து வகையான அவசர நிலைகளிலும் செயல்பட அழைக்கப்படுகின்றன. அதாவது அபாயகரமான பொருளினால் ஏற்படும் நிகழ்வுகள், உயர்மட்ட மீட்பு நடவடிக்கைகள் மற்றும் குறுகலான இடைவெளியில் ஏற்படும் மீட்பு நிகழ்வுகள், அகழி மற்றும் நிலைகுலைவு செயல்பாடுகள், நீருக்கடியில்

மீட்பு போன்ற பல்வேறு அவசர நிலைகளில் செயல்பட வேண்டியுள்ளது.

## 2. குறிக்கோள்கள்

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை "*காக்கும் பணி எங்கள் பணி*" என்ற குறிக்கோளுடன் மக்களுக்காக செயலாற்றும் ஒரு சேவைத் துறையாகும். இத்துறை மீட்பு நடவடிக்கைகள் தவிர தீயணைப்புப் பணிகளில் முக்கியமாக கவனம் செலுத்துகிறது. மக்களிடையே பிரச்சாரம் மற்றும் விளம்பரங்கள் மூலமாகவும், பள்ளிகள், பொதுமக்கள் கூடும் வணிக வளாகங்கள் மற்றும் பலமாடிக் கட்டடங்களில் குடியிருக்கும் மக்களிடையேயும் ஒத்திகை நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டியும், தீத்தடுப்பு பாதுகாப்பு நடவடிக்கைகளில் முக்கிய பங்காற்றி வருகிறது. இதன் முக்கிய நோக்கமானது சென்னை உள்ளிட்ட முக்கிய நகரங்களில் உள்ள வர்த்தக நிறுவனங்கள், வாணிப மையங்கள், பெரிய அங்காடிகள், பன்னடுக்கு வளாகங்கள் மற்றும் திரையரங்குகள்

ஆகிய இடங்களில் கூடும் பொதுமக்களுக்கு பாதுகாப்பு அளிப்பதாகும்.

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையானது, அவசரகால சேவைகளை ஆற்றுவதில் பரந்து விரிந்த பங்களிப்புடன் ஒரு பன்முகத்தன்மை கொண்ட அமைப்பாக செயல்பட்டு வருகிறது. தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைப் பணியாளர்கள் இயற்கைப் பேரிடர் மற்றும் அவசர காலங்களில் விரைந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டு கடினமான மற்றும் நுழைய முடியாத குறுகலான இடங்களிலிருந்து மனிதர்களையும், விலங்குகளையும் மீட்கின்றனர். சேதமடைந்த உடல்களை வாகனங்களிலிருந்து வெளியில் எடுத்தல், இறந்தமனித உடல்கள், விலங்குகளின் உடல்களை நீர் நிலைகளிலிருந்து மீட்டெடுத்தல் மற்றும் மோப்பநாய் குழுக்களை அனுப்பி தொலைந்த மனித உயிர்களை கண்டறிந்து மீட்டல் ஆகியவை தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் மற்ற அவசரகால சேவைகளாகும்.

காவல், வருவாய், மருத்துவம் போன்ற பிறதுறைகளுடன் இணைந்து தீவிரவாதிகளின் தாக்குதல், சாதி, சமய மோதல்கள், தேர்தல்கள், விழாக்கள், பண்டிகைகள் போன்ற தருணங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியவற்றில் மிகுந்த விழிப்புடன் செயல்பட்டு வருகிறது. முக்கிய பிரமுகர்கள் வருகை, முக்கிய கூட்டங்கள் மற்றும் விழாக்களுக்காக பெரிய அளவில் பந்தல்கள் அமைக்கப்படும் இடங்களில் இத்துறை பாதுகாப்புப் பணியினையும் மேற்கொள்கிறது. தனியாரால் நடத்தப்படும் நிகழ்ச்சிகளுக்கும், வரையறுக்கப்பட்ட கட்டண அடிப்படையில் பாதுகாப்புப் பணியினை இத்துறை மேற்கொள்கிறது. மேலும், உரிமங்கள் கோரும் சம்மந்தப்பட்ட இடங்களை ஆய்வு செய்து, அவை வரையறுக்கப்பட்டுள்ள பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகளை கடைபிடித்துள்ளனவா என்பதை உறுதி செய்து, அதன் அடிப்படையில் தடையின்மைச் சான்று/இணக்கச் சான்று/தீ

உரிமங்களை வழங்கி பல்வேறு உரிமம் வழங்கும் குழுமங்களுக்கு தீத்தடுப்பு நோக்கில் ஆலோசகராக செயல்படுகிறது.

தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட தீவிபத்து பாதுகாப்பு செயலாக்க நடவடிக்கைகள் வாயிலாக, தீ விபத்துகளைத் தடுக்கும் நோக்கத்திற்காக தற்போதுள்ள 1985–ஆம் ஆண்டு தீயணைப்பு சேவைகள் சட்டத்தை முழுமையாக மாற்றியமைக்க அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3. வரலாறு

1908–ஆம் ஆண்டு, "*மெட்ராஸ் தீயணைப்புப்படை*" (Madras Fire Brigade) என்ற பெயரில் சிறிய குழுவாக சென்னை மாநகர காவல் ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் தீயணைப்புப்படை உருவாக்கப்பட்டது. 1967–ஆம் ஆண்டில், காவல் துறையிலிருந்து பிரிக்கப்பட்டு, "*தீயணைப்புத் துறை*" என்ற தனித்துறையாக உருவாக்கப்பட்டது. இத்துறையிடம் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள்

ஆகிய இரட்டைப் பணிகள் ஒப்படைக்கப்பட்டன. இத்துறை ஆற்றிவரும் பணிகளின் தன்மைக்கேற்ப புதிய அடையாளம் கொடுக்கப்பட்டு 2001–ஆம் ஆண்டில் அரசால், இத்துறை "*தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை*" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 2001–ஆம் ஆண்டில் பெண்கள் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையில் நியமனம் செய்யப்பட்டதன் மூலம் நாட்டிலேயே முதன்முதலில் பெண் அதிகாரிகளை பணி நியமனம் செய்த மாநிலமாக விளங்குகிறது. இத்துறையை நவீனமயமாக்க பல்வேறு திட்டங்களையும், பணியாளர்களை ஊக்குவிக்க பல்வேறு நலத்திட்டங்களையும் அரசு செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையானது நாட்டில் உள்ள மிகவும் திறமை வாய்ந்த மிகப்பெரிய தீயணைப்புப் படைகளில் ஒன்று என்ற உறுதியான நற்பெயரை நிலைநாட்டியுள்ளது. தற்போது இத்துறை 361 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள்

நிலையங்களுடன் ஒகேனக்கல், கோத்தகிரி மற்றும் சென்னை மெரினா ஆகிய 3 பிரத்யேக மீட்புப்பணிகள் நிலையங்களையும் கொண்டுள்ளது.

## 4. நிருவாக அமைப்பு

தமிழ்நாடு அரசின், உள்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை செயல்பட்டு வருகிறது. இயக்குநராக இந்தியக்காவல் பணியினைச் சேர்ந்த காவல்துறை தலைமை இயக்குநர் தரத்தில் ஒரு அதிகாரி துறைத்தலைவராக உள்ளார். இத்துறை ஐந்து மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலமும் ஒரு இணை இயக்குநர் அல்லது ஒரு துணை இயக்குநரின் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகிறது. ஒரு இணை இயக்குநர் தாம்பரத்தில் உள்ள மாநிலப் பயிற்சி மையத்தின் பொறுப்பாளராக உள்ளார். இது தவிர இயக்குநரகத்தில், இயக்குநருக்கு உதவியாக கூடுதல் இயக்குநர் (செயல்பாடுகள் மற்றும் பயிற்சி), கூடுதல் இயக்குநர் (நிருவாகம்), துணை

இயக்குநர் (தலைமையகம்), துணை இயக்குநர் (நிருவாகம்), அரசு சார்பு செயலாளர் தரத்தில், நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர், இரண்டு நிருவாக நேர்முக உதவியாளர்கள் (நிருவாகம் மற்றும் கணக்கு) ஆகியோர் உள்ளனர். மேலும் இம்மண்டலங்கள் 37 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்டமும் ஒரு மாவட்ட அலுவலரின் கீழ் செயல்பட்டு வருகிறது. தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் நிருவாக அமைப்பில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையம் அடிப்படை அலகாகும். ஒவ்வொரு நிலையமும் ஒரு நிலைய அலுவலரின் தலைமையில், மாவட்ட அலுவலரின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது. தாம்பரத்தில் இயங்கி வரும் மாநிலபயிற்சி மையம் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையில் உள்ள தீயணைப்போர், நிலைய அலுவலர் மற்றும் மாவட்ட அலுவலர்களுக்கு தீயணைப்பு குறித்த அடிப்படை பயிற்சியும் மற்றும்

பொதுமக்களுக்கு ஆரம்ப தீத்தடுப்பு பயிற்சியும் அளித்து வருகிறது. தீயணைப்பு ஊர்திகளின் பழுதுகளை செப்பனிடுவதற்கும், பராமரிப்பதற்கும் சென்னையில் மாநிலப்பட்டறை ஒன்று இணை இயக்குநர் (பயிற்சி மற்றும் மீட்புப்பணி செயல்பாடுகள்) அவர்களது கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது. தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் நிருவாக அமைப்பு குறித்த விளக்கப்படம் அட்டவணை I மற்றும் II–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைக்கென தனியாக மோப்பநாய் படைப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. இந்த மோப்பநாய் படைப்பிரிவு மூலம் கட்டட இடிபாடுகளில் புதையுண்டவர்களையும் மற்றும் உயிருக்காக போராடிக் கொண்டிருப்பவர்களையும் கண்டறிய இயலும். மேலும் ஓய்வுபெற்ற பழைய நாய்களுக்கு பதிலாக பொருத்தமான இனத்தைச் சார்ந்த ஆறு புதிய நாய்களை வாங்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. மோப்ப நாய்கள்

வாங்கப்பட்டு, நாய்க்குட்டிகள் மற்றும் அவற்றைக் கையாள்பவர்களுக்கு மோப்ப நாய்களுக்கான தேசிய பயிற்சி மையம், எல்லை பாதுகாப்புப் படை (NTCD, BSF), தேக்கான்பூர், குவாலியர், மத்தியபிரதேசம் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு, பயிற்சி பெற்ற நாய்கள் தற்போது பயன்பாட்டுக்கு வந்துள்ளன.

## 5. அடிப்படைப் பிரிவு

இத்துறையின் அடிப்படைப் பிரிவு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களாகும். பதில் செயல்பாடு நேரத்தினைக் (Response Time) குறைக்கும் வகையில் அறிவியல் பூர்வமான உலகளாவிய நிலைப்படுத்துதல் அமைப்பு (Global Positioning System) வரைபடங்களின் உதவியுடன் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்களின் அமைவிடங்கள் தேர்வு செய்யப்படும்.

அதிக தொழில்நுட்ப அடிப்படையிலான தீ பாதுகாப்பு செயலாக்க நடவடிக்கைகள் வாயிலாக, தீ விபத்துக்களைத் தடுக்க அரசு வலியுறுத்துகிறது. ஒரு

புதிய ஒரூர்தி தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையம் அமைப்பதற்கு கீழ்கண்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கொண்ட அமைப்பு அரசால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது :–

| | | |
|---|---|---|
| நிலைய அலுவலர் | – | 1 |
| முன்னணி தீயணைப்போர் | – | 2 |
| இயந்திர கம்மியர் ஓட்டுநர் | – | 1 |
| தீயணைப்போர் ஓட்டுநர் | – | 2 |
| தீயணைப்போர் | – | 11 |
| மொத்தம் | = | 17 |

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களின் மாவட்ட வாரியான எண்ணிக்கை விவரம் அட்டவணை III–ல் அளிக்கப்பட்டுள்ளது.

## 6. வள ஆதாரங்கள் இருப்பு

### அ) மனித வளம்

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையானது 8069 செயல் அலுவலர்கள்/ களப்பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களை கொண்டதாகும். இத்துறையில் மாவட்ட அலுவலர், மாநில பட்டறையின்

உதவிப்பொறியாளர் (தானியங்கி), நிலைய அலுவலர்கள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் ஆகியோர் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நேரடியாகத் தேர்வு செய்யப்படுகிறார்கள். தீயணைப்போர் பதவிகளுக்கான நபர்கள் தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமத்தால் நேரடி நியமனம் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

**ஆ) ஊர்திகள்**

இத்துறை 329 நீர்தாங்கி ஊர்திகள், 32 தண்ணீர் லாரிகள், 29 சிறுநுரை தகர்வு ஊர்திகள், 19 நவீனரக நீர்தாங்கி ஊர்திகள், 3 வான்நோக்கி உயரும் 54 மீட்டர் நீளம் ஏணி கொண்ட ஊர்திகள், 2 வான்நோக்கி உயரும் 104 மீட்டர் நீளம் ஏணிகொண்ட ஊர்திகள், 21 அவசரகால மீட்பு ஊர்திகள், 115 சிறியரக நீர்தாங்கி ஊர்திகள் (350 லிட்டர்), 5 சிறிய ரக நீர்தாங்கி ஊர்திகள் (600 லிட்டர்), 22 நோயாளர் ஊர்திகள், 18 சீருந்துகள்,

38 ஈப்புகள், 3 வேன்கள், 4 இழுவை ஊர்திகள், 3 பேருந்துகள்/ சிற்றுந்துகள், 23 விசை மிதிவண்டிகள், 350 சிசி திறன் கொண்ட 60 புல்லட்டுகள், 6 பவுசர்கள், 5 கல்விசார் ஊர்திகள், நிலைய அலுவலர்களுக்கான 100 விசை மிதிவண்டிகள், உதவி மாவட்ட அலுவலர் பயன்பாட்டிற்கென 25 ஈப்புகள், 1 பாரந்தூக்கி, 11 சிறப்பு விசை மிதிவண்டிகள், 9 படைவீரர்களை ஏற்றிச் செல்லும் ஊர்தி, 3 கமாண்டோ வாகனங்கள் ஆகியவைகளைக் கொண்டு இயங்கி வருகிறது.

**இ) உபகரணங்கள்**

மீட்புப்பணிகளை திறம்பட மேற்கொள்ள இத்துறைக்கு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளதுடன், பெருவெள்ளம், நிலச்சரிவுகள், கட்டட இடிபாடுகள், தொழிற்சாலை விபத்துகள், சாலை மற்றும் இருப்புப்பாதை விபத்துகள் போன்ற நெருக்கடி நிலைகளில் சிறப்பாகச் செயல்பட ஏதுவாக பின்வரும் நவீன மற்றும் சிறப்புக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் இத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளன:–

| வ. எண் | கருவிகளின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உயிர் காக்கும் மிதவைகள் மற்றும் மேலங்கிகளுடன் கூடிய மிதவைப் படகுகள் | 125 |
| 2. | நீட்டிச் சுருக்கும் இரப்பர் படகு (ம) இரப்பர் விசைப் படகுகள். | 73 |
| 3. | அனல் வழி உருவம் அறியும் நிழற்படக் கருவி | 19 |
| 4. | பல்வகை நச்சு வாயுக்களைக் கண்டுபிடிக்கும் கருவிகள் | 13 |
| 5. | செறிவூட்டக் கூடிய அதிகத் திறன் கொண்ட கையடக்கத் தேடும் விளக்கு | 1095 |
| 6. | செறிவூட்டக்கூடிய அதிகத்திறன் கொண்ட கையடக்க விளக்கு | 377 |
| 7. | நீட்டிச் சுருங்கும் ஆற்றல் கொண்ட அவசர கால விளக்குகள் | 98 |
| 8. | மின்னாக்கியுடன் கூடிய மின் ரம்பங்கள் | 80 |
| 9. | எளிதில் தூக்கிச் செல்லக் கூடிய மின் ரம்பங்கள் | 300 |
| 10. | சிமெண்ட் கலவை கட்டமைப்புகளை உடைக்கும் கருவிகள் | 61 |

| | | |
|---|---|---|
| 11. | புகை வெளியேற்றும் கருவிகள் | 66 |
| 12. | எளிதில் தூக்கிச் செல்லக் கூடிய துளையிடும் மின் கருவிகள் | 51 |
| 13. | உயிர் காப்பான் மிதவை | 4790 |
| 14. | உயிர் காக்கும் சட்டை | 3419 |
| 15. | பொது அறிவிப்பு அமைப்பு | 1536 |
| 16. | நீட்டிப்பு மற்றும் சுருங்கும் ஏணிகள் | 54 |
| 17. | மூச்சுக்கருவி | 626 |
| 18. | தலைக்கவசம் | 4617 |
| 19. | பணியாளர் தற்காப்பு உடைகள் | 3778 |
| 20. | தீ பாதிக்காத கையுறைகள் | 120 |
| 21. | அதிக அளவு நீர் வெளியேற்றும் திறனுள்ள எளிதில் தூக்கிச் செல்லக்கூடிய பம்புகள் | 34 |
| 22. | தண்ணீர் அகற்றும் மோட்டார் | 9 |
| 23. | நீர் மூழ்கிப் பம்புகள் | 6 |
| 24. | கோம்பி கருவிகள் | 30 |
| 25. | மணிலா கயிறு 50 அடி | 460 |
| 26. | மணிலா கயிறு 100 அடி | 608 |
| 27. | மணிலா கயிறு 130 அடி | 1222 |
| 28. | நீரியல் அழுத்தத்தால் இயங்கும் கோம்பி கருவிகள் | 53 |
| 29. | மின்கலனில் இயங்கும் கோம்பி கருவிகள் | 6 |

| | | |
|---|---|---|
| 30. | ஹைட்ராலிக் கட்டர் | 38 |
| 31. | ஹைட்ராலிக் ஸ்பெடரர் | 30 |
| 32. | நீட்டிப்பு ஏணி | 396 |
| 33. | கயிறு ஏணி | 65 |
| 34. | ஏணி | 285 |
| 35. | பாம்பு பிடிப்பான் | 383 |
| 36. | ஆழ்குழாய் கிணறு மீட்பு உபகரணங்கள் | 9 |
| 37. | நோயாளர் படுக்கை | 336 |
| 38. | ஏர் லிப்டிங் பேக் | 48 |
| 39. | ரோப் லான்ச்சர் | 5 |
| 40. | இடிபாடுகளில் சிக்கிக் கொண்டவர்கள் உள்ள இடத்தினை அடையாளம் காட்டும் கருவிகள் | 10 |
| 41. | ரோப்ரைடர் | 5 |
| 42. | மிதவைப் பம்புகள் | 56 |
| 43. | சிறிய ரக பம்புகள் | 56 |
| 44. | காற்று பிடிக்கும் கருவி | 1 |
| 45. | ஆக்ஸ்லேட்டிங் மானிட்டர்ஸ் | 4 |
| 46. | வீடியோ புகைப்படக் கருவி | 2 |
| 47. | தீ பாதிக்காத உடைகள் | 169 |
| 48. | ரசாயன பாதுகாப்பு உடைகள் | 84 |
| 49. | கடலடி சுவாசக் கருவியுடன் கூடிய மூழ்கு தனியுடை | 30 |
| 50. | மின்னாக்கி | 18 |

| | | |
|---|---|---|
| 51. | கண்ணாடி இழைகளிலான விசைப் படகுகள் | 8 |
| 52. | உயிரோடு உள்ளவரை கண்டறியும் கருவி | 4 |
| 53. | முன்னும் பின்னும் இயங்கக் கூடிய ரம்பங்கள் | 50 |
| 54. | எளிதில் தூக்கிச் செல்லக் கூடிய மின் வட்ட ரம்பங்கள் | 70 |
| 55. | மின்மோட்டாருடன் இணைந்த மின் ரம்பங்கள் | 116 |
| 56. | மின் கையுறைகள் | 100 |
| 57. | ரப்பர் கையுறைகள் | 60 |
| 58. | கூடாரம் | 1 |

## 7. தகவல் தொடர்பு வசதிகள்

### அ) தொலைபேசிகள் மற்றும் கம்பியில்லாத் தொலை தொடர்புக் கருவிகள்

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகளை குறித்த நேரத்தில் மேற்கொள்வதே இத்துறையின் அத்தியாவசிய பணியாகும். ஒவ்வொரு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையத்திலும் ஒரு தொலைபேசி இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. '101' மற்றும் '102' என்ற இலவச தொலைபேசி

இணைப்புகளைக் கொண்ட நவீனமயமாக்கப்பட்ட தீகட்டுப்பாட்டு அறை சென்னை நகரில் செயல்பட்டு வருகிறது. '101' என்ற இலவச தொலைபேசி இணைப்பு அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும், ஒரு சில பெரிய நகரங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு சேவை செய்திடும் வகையில் தீயணைப்பு அலுவலர்களிடையே தகவல் தொடர்பை வலுப்படுத்தும் வகையில், நிலைய அலுவலர் மற்றும் அப்பதவிக்கு மேல் உள்ள அலுவலர்களுக்கிடையே செல்லிட தொலைபேசிகளில் தொடர்பு கொள்ள ஏதுவாக குழு ஒருங்கிணைப்பு முறை (Common User Group) டிசம்பர் 2009 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இது மாநில அளவில் அலுவலர்களுக்கிடையே கட்டணமில்லா அழைப்புகளுடன் கூடிய இணைய அமைப்பாக (Network) செயல்பட்டு வருகிறது. அந்தந்த பகுதியினை சேர்ந்த நிலைய அலுவலர்களுக்குரிய செல்லிட தொலைபேசி எண், நிலையான எண்ணாக உள்ளதால்

இதனை பொதுமக்கள் நினைவில் கொள்ள ஏதுவாக உள்ளது.

இத்துறையின் அனைத்து அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்கள், குழு ஒருங்கிணைப்பு முறையின் (சி.யூ.ஜி) அடிப்படையில் செல்லிட தொலைபேசி எண்ணின் மூலம் இணைக்கப்பட்டுள்ளனர். சென்னை நகரம், திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள அனைத்து தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்களும் தகவல் தொடர்பு பரிமாற்றத்திற்காக கம்பியில்லா தகவல் தொடர்பு வசதிகள் மூலம் தலைமையகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைக்கான நவீனப்படுத்தப்பட்ட மாநில அளவிலான கட்டுப்பாட்டு அறையை அமைப்பதற்காக நாடு முழுவதும் ஒரே அவசர நிலை எண் "112"–ல் காவல்துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையினை ஒருங்கிணைத்து அவசரகால பதில் செயல்பாடு ஆதார அமைப்பு (ERSS – Emergency Response Support System) திட்டத்தை செயல்படுத்த அரசு உத்தரவிட்டுள்ளது.

அவசரகால பதில் செயல்பாடு ஆதார அமைப்பு (ERSS) திட்டத்தை செயல்படுத்த அனைத்து தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையங்களுக்கு மேசை கணினிகளுக்கு அகன்ற அலைவரிசையுடன் கூடிய இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 371 அதிக உறுதியான வரைப்பட்டிகை அமைப்பு (Rugged Tablet) கொண்ட கணினி உபகரணங்கள் வாகனத்தில் பொருத்தப்பட்டு வாகனத்தின் இயக்கம் கண்காணிக்கப்படுகிறது. தற்போது, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை அனைத்து அவசர அழைப்புகளுக்கும் மாநில அவசர பதிலீட்டு மையத்தில் (SERC– State Emergency Response Centre) இருந்து தகவல்கள் பெறப்பட்டு அனுப்பப்படுகிறது. மேலும், அனைத்து தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையங்களும் இம்மையத்துடன் (SERC) முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்டு இத்திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

## ஆ) பதில் செயல்பாடு நேரம்

பதில் செயல்பாடு நேரமானது (Response Time) விபத்து அழைப்பு பெறப்பட்ட நேரத்திலிருந்து விபத்து நடந்த இடத்தை சென்றடைய முதல் தீயணைப்பு ஊர்தி எடுத்துக் கொள்ளும் நேரமாகும். பதில்செயல்பாடு நேரமானது துறை மேற்கொள்ளும் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகளின் செயல்திறனை வெளிப்படுத்தும் இன்றியமையாத காரணிகளில் ஒன்றாகும். போக்குவரத்து நெரிசல் அதிகம் இருக்கின்ற போதிலும், பதில் செயல்பாடு நேரத்தினை வெகுவாக குறைக்க இத்துறை தொடர்ந்து முயற்சித்து வருகிறது. தொலைபேசி மற்றும் கம்பியில்லா தகவல் தொடர்பு வசதிகள் மட்டுமல்லாது, தீ விபத்து மற்றும் மீட்புப்பணி நிகழ்வு இடங்களுக்கு தீயணைப்பு ஊர்திகள் செல்லும் பதில் செயல்பாடு நேரத்தினை குறைந்த பட்சமாக குறைப்பதற்காகவும் மற்றும் அதனை கண்காணிப்பதற்காகவும் தீயணைப்பு ஊர்திகளில், ஊர்திகள் நடமாட்டத்தினையும் மற்றும் ஊர்தி

இருக்கும் பகுதியினையும் காட்டும்கருவி (Vehicle Tracking with Geo–Positioning System) அமைக்கப்பட்டுள்ளது. இனி வருங்காலங்களில் பதில் செயல்பாடு நேரத்தினை குறைக்கும் வகையில், புதிய தீயணைப்பு நிலையங்களின் அமைவிடங்கள் அறிவியல் பூர்வமான வரைபடங்களின் உதவியுடன் தேர்வு செய்யப்படும்.

**இ) துறை இணையதளம்**

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைக்கென http://www.tnfrs.tn.gov.in என்ற இணையதள வசதி பொதுமக்களுக்குத் தேவையான தகவல்களைக் கொண்டுள்ளது மற்றும் அதனைப் பயன்படுத்திக் கொள்பவர்களுக்கு ஒரு நண்பனாகச் செயல்பட்டு வருகிறது. இவ்வலைதளம் தேசிய தகவல் தொடர்பு மையத்தினால் (National Informatics Centre) பராமரிக்கப்பட்டு வருகிறது. இவ்வலைதளம், இத்துறையைப் பற்றிய செய்திகள் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்த தகவல்களை அளிப்பதுடன்

தீப்பாதுகாப்பு குறித்து பொதுமக்களுக்கு கற்பிப்பதில் முக்கியபங்கு வகிப்பதுடன், தேசிய கட்டட விதிகள் தொகுப்பு மற்றும் இதர சட்ட விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள கட்டாய பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் உரிம நிபந்தனைகள் குறித்த அனைத்து தகவல்களையும் அளிக்கின்றது.

## 8. பயிற்சி வசதிகள்

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையானது பொதுமக்களுக்குச் சேவை புரிந்திடும் வகையில், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகளில் ஏற்பட்டுள்ள நவீனகால வளர்ச்சி மற்றும் தொழில்நுட்பங்களுக்கு ஈடுகொடுக்கும் வண்ணம் இத்துறையில் ஆரம்பநிலைப் பணியிடங்களில் உள்ள பணியாளர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியின் தரத்தை மேம்படுத்துவதிலும், அனைத்து நிலைகளில் உள்ள பணியாளர்களுக்கும் புத்துணர்வு பயிற்சிகள் வழங்குவதிலும் கவனம் செலுத்துகிறது. இப்பயிற்சி வகுப்புகள் தாம்பரத்தில்

உள்ள நன்கு பராமரிக்கப்படும் மாநிலப்பயிற்சி மையத்தில் நடத்தப்படுகின்றன.

அனைத்து நிலைகளிலும் உள்ள பணியாளர்களுக்கு தரமான பயிற்சி வழங்க தேவையான நவீனகால வளர்ச்சி மற்றும் தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய ஊர்திகள் மற்றும் உபகரணங்களுடன் சென்னை தாம்பரம் பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. குளிர்சாதன வசதி கொண்ட வகுப்பறைகள், ஒளி/ஒலிப்படக் கருவி, கணினிகள், வலைதள இணைப்பு, நூலகம் மற்றும் உணவகத்துடன் இணைந்த தங்கும் அறைகள் ஆகியவைகள் பயிற்சியின் தரத்தை மேம்படுத்த உதவியாக உள்ளன. நாகபுரி தேசிய தீயணைப்பு பயிற்சி கல்லூரியில் அளிக்கப்படும் பாடத்திட்டங்களின் அடிப்படையில் பயிற்சிகளை நடத்துவதற்காக, நாட்டிலுள்ள மண்டல பயிற்சி மையங்களுள் ஒன்றாக தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் மாநில பயிற்சி மையத்தை இந்திய அரசின் உள்துறை அமைச்சகம்

அங்கீகரித்துள்ளது. இந்த மாநில பயிற்சி மையம், பிற மாநிலத்தைச் சார்ந்த தீயணைப்பாளர்கள், பொதுத்துறை நிறுவனங்கள், அரசுத்துறை நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களுக்கும் உரிய பயிற்சி அளித்து வருகிறது. அனைத்து மாவட்ட தலைமையிடங்களிலும், தனிப்பட்ட நபர்களுக்கு ஒரு வார காலத்திற்கு, நபர் ஒருவருக்கு ரூ.1,000/– என்ற கட்டணத்தின் அடிப்படையில், ஆரம்ப தீத்தடுப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது.

இத்துறை சமுதாயத்தில் தீ மற்றும் உயிர் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சி பெற்ற நபர்களை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைக்குத் தேர்வு செய்யப்படும் தீயணைப்போர்களுக்கு மாநில பயிற்சி மையத்திலும் மற்றும் பல்வேறு மாவட்டங்களில் தற்காலிக பயிற்சி மையங்கள் துவங்கப்பட்டு அடிப்படை பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

## 9. தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்களுக்கான கட்டடங்கள்

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்கள் 24 மணிநேரமும் செயல்படுகிறது மற்றும் இந்நிலையங்களே இத்துறையின் உயிர்நாடியாகும். எனவே, இந்நிலையங்கள் தேவையான வசதிகளுடன் கூடிய கட்டடத்தில் அமைக்கப்பட்டால்தான் விலை உயர்ந்த ஊர்திகள் மற்றும் கருவிகளை நல்ல நிலையில் பராமரிப்பதுடன், பணியாளர்களுக்குத் தேவையான இடவசதியும் செய்து கொடுக்க இயலும். ஒரு தீயணைப்பு மீட்புப்பணிகள் நிலையத்திற்கான கட்டடம் கட்டத் தோராயமாக 45 செண்ட் நிலம் தேவைப்படுகிறது. தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையில், மொத்தமுள்ள 364 நிலையங்களில் 273 நிலையங்கள் அவற்றிற்குச் சொந்தமான கட்டடங்கள் அல்லது வாடகையில்லா அரசுக் கட்டடங்களிலும் மற்றும் 91 நிலையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

19 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தினர் மூலம் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 10. தீத்தடுப்பு

இத்துறையின் பணிகள் பல்வேறுபட்டதாக இருந்தபோதிலும் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்கள் "*வருமுன் காப்பதே நன்று*" என்ற கொள்கையின் அடிப்படையில் தீத்தடுப்பையே முதன்மைப் பணியாக மேற்கொண்டுள்ளது. தீத்தடுப்பு, என்பது தீவிபத்தால் ஏற்படும் நெருக்கடிகளையும் மற்றும் அழிவுகளையும் குறைப்பதற்கான முன்னெச்சரிக்கையான நடவடிக்கை ஆகும். நகர்ப்புர மற்றும் ஊரகப்பகுதி மக்களுக்கு தீத்தடுப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் மிக முக்கியமான பணியினை தீத்தடுப்புக் குழுக்கள் மேற்கொள்கின்றன. தீத்தடுப்பு பணியினை முனைப்புடன் செயல்படுத்த 13 மாவட்டங்களில் தீத்தடுப்புக் குழுக்களை இத்துறை

அமைத்துள்ளது. மேலும் தீத்தடுப்புக் குழுக்கள் இல்லாத இடங்களில், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்களே தீத்தடுப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. பொதுமக்களின் பாதுகாப்பு கருதி தீத்தடுப்பு ஒத்திகைகள், பொருட்காட்சி, மேடைநாடகங்கள், குறும்படம் மூலம் பள்ளிகள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள், குடிசைப்பகுதிகள் மற்றும் பலமாடிக் கட்டடப் பகுதிகளில் தீப்பாதுகாப்பு மற்றும் தீத்தடுப்பு விழிப்புணர்வு குறித்த நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தீவிபத்து நேரிடும் அவசரகாலங்களில் தீப்பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பாக வெளியேறும் நடைமுறைகள் குறித்து மாணவர்களுக்கு கற்பிக்க, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பள்ளியில் வெளியேறும் நடைமுறைகள் குறித்த அவசரகால வெளியேற்றப் பயிற்சிகள் (Evacuation Drills) நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் சனவரி திங்கள் 21–ஆம் நாள் நாடு முழுவதும் உள்ள

பள்ளிகளில் தேசிய அளவிலான தீ மற்றும் அவசரகால வெளியேறுதல் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

பள்ளி வளாகங்களில் தீ மற்றும் உயிர் பாதுகாப்பு வழிமுறைகள் செய்யப்பட்டுள்ளனவா என்பது நிலைய அலுவலரால் கட்டாய ஆய்வுமூலம் உறுதி செய்யப்படுகிறது. பள்ளிகளில் தீப்பாதுகாப்புச் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளதை ஆய்வு மற்றும் தணிக்கை செய்த பின்னரே சம்பந்தப்பட்ட தீயணைப்பு நிலைய எல்லைக்குட்பட்ட நிலைய அலுவலரால் தடையின்மைச் சான்று வழங்கப்படுகிறது.

பொதுமக்களிடையே தீவிபத்துக்களின் எண்ணிக்கையை குறைப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த தீபாவளி பண்டிகையின்போது மாநிலம் முழுவதும் தொலைக்காட்சிகள் மற்றும் திரையரங்குகளில் பிரபல நடிகர்களைக் கொண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் பொதுமக்கள் கூடும் முக்கிய இடங்களில்

தீப்பாதுகாப்பு பற்றிய பிரசுரங்கள் விநியோகம் செய்யப்படுகின்றன.

## 11. தீப்பாதுகாப்பு தன்னார்வத் தொண்டர்கள்

அவசர காலங்களில் தீயணைப்பு பணியாளர்களுக்கு உதவி புரிய பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் சுய உதவி குழுக்களிலிருந்து தீப்பாதுகாப்பு தன்னார்வத் தொண்டர்கள் சேர்க்கப்பட்டு அவர்களுக்குப் பல்வேறு ஆரம்பநிலை தீத்தடுப்பு திறன் மற்றும் மீட்பு வழிகள் குறித்து பயிற்சியளிக்கப்படுகிறது. இத்துறை தற்போது 4956 தன்னார்வ தொண்டர்களைப் பெற்றுள்ளது.

## 12. உயர் மாடிக் கட்டடங்கள் மற்றும் மருத்துவமனைகளில் தீத்தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

உயர்மாடிக் கட்டட ஆய்வுக் குழுவினரால் உயர்மாடிக் கட்டடங்கள், கல்வி நிறுவனங்கள், வணிக வளாகங்கள், பொதுக் கட்டடங்கள், மருத்துவமனைகள் மற்றும் பல அடுக்குமாடி குடியிருப்புகள் ஆகியவை

ஆய்வு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட உரிமம் வழங்கும் அலுவலர்களுக்கு அறிக்கை அனுப்பி வைக்கப்படுகிறது. இத்துடன் அரசு கட்டடங்களில் இத்துறை தீ பாதுகாப்பு தணிக்கை மேற்கொள்கிறது.

உயர்மாடிக் கட்டடங்கள் மற்றும் மருத்துவமனைகளுக்கு உரிமம் வழங்குவதற்கு முன்பு கீழ்க்காணும் முக்கிய தீத்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என ஆய்வு செய்யப்படுகிறது:–

i. **அவசரகால வெளியேறும் வழிகள் போதுமான அளவில் அமைத்தல்.**
ii. மணல் மற்றும் தண்ணீரால் நிரப்பப்பட்ட தீ வாளிகள் போதுமான அளவு வைத்தல்.
iii. தீயணைப்பு பணியினை தடையின்றி தொடர்ச்சியாக மேற்கொள்ளத் தண்ணீர் சேமிப்பு தொட்டி அமைத்தல்.
iv. திரையரங்குகளின் உள்ளே போதுமான தீயணைப்பான்களும் மற்றும் படச்சுருள் இயக்குபவர் அறையில் முதல் உதவிப் பெட்டியும் கட்டாயமாக இருத்தல்.

v. பல திரையரங்குகள் ஒருங்கிணைந்த அடுக்குமாடிக் கட்டடத்தில் நீர் தெளிப்பான்கள் மற்றும் புகை அறியும் கருவிகள் கட்டாயமாக அமைத்தல்.

vi. கட்டடங்களில் பொருத்தப்பட்டுள்ள அனைத்துத் தீயணைப்புக் கருவிகளைக் கையாளுவதிலும் மற்றும் பராமரிப்பதிலும் பணியாளர்கள் மற்றும் வேலையாட்களுக்கு பயிற்சி அளித்தல்.

vii. பொய் மேற்கூரைகள் மற்றும் சுவர்களில் பொருத்தப்படும் அலங்கார வடிவமைப்புகள் தீயால் பாதிக்கப்படாத பொருட்களால் அமைத்தல்.

viii. போதுமான தீயணைப்பான்கள் மற்றும் நீர்விடு குழாய் அமைப்புகள் பொருத்துதல்.

ix. உள்ளூரில் உள்ள தீயணைப்பு அலுவலரின் ஆலோசனைகளுக்கு ஏற்ப அவரால் கூறப்படும் இடங்களில் நீர் தெளிப்பான்கள் மற்றும் புகை அறியும் கருவிகள் பொருத்துதல்.

x. தூக்குப் படுக்கை நோயாளிகளை எடுத்துச்செல்ல ஏதுவாக அறைகளுக்கு செல்லும் நடைபாதைகள் மற்றும் வெளியேறும்

வழிகளைப் போதுமான அளவு அகலமுடையதாக அமைத்தல்.

xi. புகை உட்புகாத கதவுகள் அல்லது பிரிவுகள் அமைத்தல்.

xii. போதுமான அவசர வழிகள் மற்றும் சரிவுகள் அமைத்தல்.

xiii. ஒளிரும் சைகைகள் மற்றும் தீயணைக்க பின்பற்ற வேண்டிய அறிவிப்பு அமைப்புகள் அமைத்தல்.

xiv. செவிலியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு மருத்துவமனையில் பொருத்தப்பட்டுள்ள அனைத்து தீயணைப்புக் கருவிகளைக் கையாள்வதிலும் மற்றும் பராமரிப்பதிலும் கட்டாயமாகப் பயிற்சி அளித்தல்.

## 13. கோடைக்காலம் மற்றும் தீபாவளி பண்டிகையின் போது ரோந்துப் பணியில் ஈடுபடுதல்

விபத்துகளை காலவிரயமின்றி உடனடியாக எதிர்கொள்ளும் விதத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் ஜூலை முடிய உள்ள மாதங்களில் ஊர்திகளை ரோந்துப் பணியில் ஈடுபடுத்தும் முறை

மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முந்தைய ஆண்டுகளில் தீ விபத்து மற்றும் மீட்பு நிகழ்வுகள் நேரிட்ட புள்ளி விவரங்களின்படி அபாயகரமான பகுதிகளை கண்டறிந்து அவ்விடங்களில் ரோந்துப்பணி மற்றும் நிலைநிறுத்தப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 14. தீயணைப்புப் பணி நாள்

ஆண்டுதோறும், ஏப்ரல் திங்கள் 14–ஆம் நாள் நாடு முழுவதும் தீயணைப்பு பணிநாளாக அனுசரிக்கப்படுகிறது. இந்நாளில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியின்போது வீரமரணம் அடையும் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி துறை பணியாளர்கள் நினைவு கூறப்படுகின்றனர். ஆண்டுதோறும் ஏப்ரல் திங்கள் 14–ஆம் நாள் தொடங்கி ஒருவார காலத்திற்கு பொதுமக்கள் மற்றும் பணியாளர்கள் போன்ற அனைத்துத் தரப்பு மக்களிடையே தீப்பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் செய்தித்தாள்கள், தொலைக்காட்சி மற்றும் வானொலி வாயிலாக பிரச்சாரங்கள் செய்யப்படுவதன் மூலம் தீயணைப்புப்

பணிநாள் கொண்டாடப்படுகிறது. தீப்பாதுகாப்பு குறித்த பல்வேறு போட்டிகள் மாநிலம் முழுவதும் மாணவ மற்றும் மாணவியர்களிடையே நடத்தப்படுகின்றன.

## 15. ஊக்கப்படுத்துதல் மற்றும் ஊக்கத் தொகை

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைப் பணியாளர்கள் தங்களது உயிரைப் பணயம் வைத்துப் பணியாற்றி வருவதால், அவர்களை ஊக்குவிக்கும் விதமாக கீழே குறிப்பிட்டுள்ள பதக்கங்கள் மற்றும் விருதுகள் அரசால் வழங்கப்படுகின்றன.

### I. விருதுகள்

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைப் பணியாளர்கள் தங்களது பணியின் போது கடமை உணர்வுடனும், அஞ்சாநெஞ்சுடனும் ஆற்றும் பணியினை அங்கீகரிக்கப்படும் வகையில் மாநில அரசால் பின்வரும் விருதுகள் ஏற்படுத்தப்பட்டு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

**(அ) தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப்பணி பதக்கம் (அண்ணா பதக்கம்)**

தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப்பணி பதக்கம் மெச்சத்தக்க வகையில் பணிபுரிபவர்களுக்கு (அண்ணா பதக்கம்) ஒவ்வொரு ஆண்டும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான செப்டம்பர் 15 அன்று வழங்கப்படுகிறது. பாராட்டத்தக்க பணிகளுக்காக இப்பதக்கம் பெறுபவர்கள், அவர்களுடைய பதவித் தரத்திற்கேற்ப ஒட்டு மொத்த பரிசுத்தொகையாக ரூ.4,000/– முதல் ரூ.10,000/– வரை பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.

**(ஆ) தமிழ்நாடு முதலமைச்சரின் வீரதீரச் செயலுக்கான பதக்கம் (அண்ணா பதக்கம்)**

தமிழ்நாடு முதலமைச்சரின் வீரதீரச் செயலுக்கான பதக்கம் (அண்ணாபதக்கம்) பெறுபவர்கள் ஒட்டு மொத்த வெகுமதித் தொகையாக ரூ.5.00 இலட்சம் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.

## இ) தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கம்

தமிழ்நாடு முதலமைச்சரின் பணிப்பதக்கமானது, ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் திருநாளன்று வழங்கப்படுகிறது. தண்டனைகள் ஏதுமின்றி 10 ஆண்டு காலத்திற்கும் மேலாக அப்பழுக்கற்று பணிபுரியும் நிலைய அலுவலர் பதவிக்கு கீழுள்ள பணியாளர்களுக்கு இப்பதக்கம் வழங்கப்படுகிறது. இப்பதக்கம் பெறும் அனைவரும் மாதாந்திரப் பணப்பயனாக ரூ.400/– பெறுவர்.

## (ஈ) சிறந்த பணிக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் பணி பதக்கம்

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையில் மிகச்சிறந்த முறையில் பணியாற்றிய பணியாளர்களின் திறமைகளைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் தீ தொண்டு நாளான ஏப்ரல் 14–ஆம் தேதியன்று ஆறு பதக்கங்கள் வழங்கப்பட்டு வருகிறது. அந்நபர்களுக்கு 8 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம் மற்றும் ஒட்டு

மொத்த பரிசுத்தொகை ரூ.2,000/– முதல் ரூ.3,000/– வரை வழங்கப்படுகிறது.

**(உ) பிற பதக்கங்கள்**

மேற்கூறியவை தவிர மாநில அரசின் பரிந்துரையின் அடிப்படையில் மத்திய அரசால் கீழ்கண்ட பதக்கங்கள் வழங்கப்படுகின்றன:–

(i) சுதந்திரதினம் மற்றும் குடியரசு தினத்தன்று வழங்கப்படும் சிறந்த மெச்சத்தக்க பணிக்கான குடியரசுத் தலைவரின் தீயணைப்புப்பணி பதக்கம்.

(ii) சுதந்திரதினம் மற்றும் குடியரசு தினத்தன்று வழங்கப்படும் வீரதீரச் செயல்களுக்கான குடியரசுத் தலைவரின் தீயணைப்புப்பணி பதக்கம்.

**II. நலத்திட்டங்கள்**

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையில் 15 மற்றும் 25 ஆண்டுகள் பணிபுரிந்த பணியாளர்கள்

தானாகவே அடுத்த கட்டத்திற்கு தரம் உயர்த்தப்பட்டுள்ளனர்.

**(i) தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் சேமநல நிதி**

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையைச் சேர்ந்த பணியாளர்களுக்கு தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை சேமநல நிதியிலிருந்து உதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில், தற்போது 6906 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். உறுப்பினர்களின் நலனை மேம்படுத்த பின்வரும் காரணங்களுக்காக நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது.

(அ) தீயணைப்புப் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்போர் காசநோய், தொழுநோய், புற்றுநோய் போன்ற கொடிய நோய்களினால் பாதிக்கப்பட்டிருப்பின் ஊட்டச் சத்துள்ள உணவு வாங்கிக் கொள்வதற்காக;

(ஆ) தகுதிவாய்ந்த அரசு மருத்துவ அதிகாரிகளின் பரிந்துரையின் பேரில் எந்தவொரு காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படாத

கடுமையான நோய்களைக் கொண்ட தீயணைப்புப் பணியாளர்கள் அல்லது அவர்களைச் சார்ந்துள்ளவர்களுக்கு மருத்துவ உதவி வழங்குவதற்காக;

(இ) உறுப்பினர்களுடைய குழந்தைகளின் உயர்கல்விச் செலவுக்காக;

(ஈ) காலஞ்சென்ற பணியாளரின் குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்குவதற்காக;

(உ) உறுப்பினர்களோ, அவர்களைச் சார்ந்தவர்களோ இறந்துவிட்டால், அவர்களது ஈமச்சடங்கு செலவுக்காக.

அரசு வழங்கும் ஆண்டு மானியம் ரூ.20 இலட்சத்தினை பணியாளர் பங்களிப்புடன் இணைத்துள்ளது.

## (ii) குழு காப்பீட்டுத் திட்டம்

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை பணியாளர்கள், அப்பணியில் இருக்கும்போதோ, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணியில் ஏற்படும்

விபத்தினாலோ இறக்க நேரிட்டால் அவர்களின் குடும்பத்திற்கு உதவுவதற்கு என அனைத்து பதவிகளிலும் உள்ள தீயணைப்புப் பணியாளர்களை உள்ளடக்கிய "குழுகாப்பீட்டுத் திட்டம்" ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், மாவட்ட அலுவலர், துணை இயக்குநர், இணை இயக்குநர் ஆகியோர்களுக்கு ரூ 4.00 இலட்சம் மற்றும் தீயணைப்போர் முதல் உதவி மாவட்ட அலுவலர் வரை ரூ.2.00 இலட்சம் நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**(iii) உணவுப் பொருட்களுக்கு மானியம் வழங்கும் திட்டம்**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையில் பணிபுரியும் உதவி மாவட்ட அலுவலர் பதவி வரையிலான பணியாளர்களுக்கு, உணவுப்பொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. அரிசி, கோதுமை, சர்க்கரை, மைதா மற்றும் பருப்பு போன்ற

உணவுப் பொருட்கள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன.

**(iv) பணியாளர்களுக்கான உணவுப்படி**

உதவி மாவட்ட அலுவலர் வரையிலான தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை பணியாளர்கள் மற்றும் நிலைய அலுவலர்கள் (போக்குவரத்து) ஆகியோர்களுக்கு, தீவிபத்து, மீட்புப்பணி அழைப்பு மற்றும் அவசர காலங்களில் பணியாளர்கள் படைதிரட்டும் (Mobilization) பணியில் ஈடுபடும்போது உணவுப்படியாக சென்னையில் ரூ.300/– ஆகவும், பிறபகுதிகளில் ரூ.250/– ஆகவும் வழங்கப்பட்டு வருகிறது.

**(v) மானிய விலையில் பொருட்கள் வாங்க சிறப்பு அங்காடிகள்**

காவல்துறையில் பணிபுரியும் ஓய்வுபெற்ற மற்றும், உயிரிழந்த பணியாளர்களின் குடும்பங்களுக்கு சிறப்பு அங்காடிகள் மூலம் உணவுப்பொருட்கள் வழங்கும் திட்டத்தினை போன்று தீயணைப்பு மற்றும்

மீட்புப்பணிகள் துறை பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கும் மானிய விலையில் பொருட்கள் வழங்கப்படுகிறது.

### (vi) காவல் மருத்துவமனைகளில், தீயணைப்புப் பணியாளர்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில், சிகிச்சை வசதிகள் விரிவாக்கம்

தமிழ்நாடு காவல் மருத்துவமனைகளில் காவலர்களுக்கு கிடைக்கும் சிகிச்சை வசதிகள் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

### (vii) குடியிருப்புகள் கட்டுதல்

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் பணியாளர்களுக்கு அவசரகாலங்களில் உடனடியாகவும் எளிதாகவும் பணியாளர்களைத் திரட்டவும், செயல்திறனைக் கூட்டவும், அவர்களது பணியிடத்திற்கு அருகிலேயே வாடகையில்லா குடியிருப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. தற்போது மாநிலம் முழுவதிலும் பயன்பாட்டில் உள்ள 1557 குடியிருப்புகள் தவிர மேலும் 239 குடியிருப்புகள் பல்வேறு இடங்களில்

கட்டப்பட்டு வருகின்றன. இக்கட்டுமானப் பணிகள் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தால் மேற்கொள்ளப்படுகின்றன. மேலக்கோட்டையூர் கிராமத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 113 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

## 16. விளையாட்டுப் போட்டிகள்

தீயணைப்பு வீரர்களின் உடற்தகுதியினை தக்க வைத்துக்கொள்ளும் வகையில் தடகளப் போட்டிகள், பூப்பந்து, கைப்பந்து, கால்பந்து மற்றும் நீச்சல் உள்ளிட்ட விளையாட்டுகள், மண்டலம் மற்றும் மாநில அளவில் நடத்தப்படுகின்றன. மேலும் தீயணைப்புப்பணி மற்றும் மீட்புப்பணி திறனைப் பணியாளர்களிடத்தில் மேம்படுத்தும் வகையில், நீர்விடு குழாய் போட்டி, ஏணிப்பயிற்சி, கயிறு ஏறுதல், பம்பு இயக்குதல், தீயணைப்பு வாகனங்களை இயக்குதல் போன்ற விரைவான தீயணைப்பு மற்றும் மீட்பு நுட்பங்களைக்

கொண்ட போட்டிகள் பணியாளர்களிடையே நடத்தப்படுகின்றன. விளையாட்டுப் போட்டிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து மண்டல விளையாட்டுப் போட்டிகள் மற்றும் மாநில விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கு மானியத் தொகை வழங்கப்படுகிறது.

## 17. முன் முயற்சிகள்

**பொதுமக்களின் உயிர் மற்றும் உடைமைகளை காக்கும் வகையில் தீயணைப்போர்கள் ஆற்றிவரும் சேவையின் தரத்தை உயர்த்துவதன் அவசியத்தையும், துறையில் உள்ள பணியாளர்களை ஊக்கப்படுத்த வேண்டும் என்பதையும் பணியாளர்களின் நலனையும் கருத்தில் கொண்டு பின்வரும் முக்கிய தொடக்க முயற்சிகளை அரசு மேற்கொண்டுள்ளது:–**

- தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட 1200 தீயணைப்போருக்கான நியமனம் மற்றும் பயிற்சி அளிக்க 8 தற்காலிக பயிற்சி மையங்கள் அமைத்து பயிற்சி வழங்க ஒப்பளிப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

- ❖ காவல்துறை பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் இடர்படியினை உயர்த்தி வழங்கப்பட்டதைப்போன்று நிலைய அலுவலர் மற்றும் அதற்கு கீழுள்ள பணியாளர்களுக்கு இடர்படியினை உயர்த்தி ஒப்பளிப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

- ❖ நிலைய அலுவலர் பதவிக்கு கீழுள்ள பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மிகைப்பணி ஊதியம் ரூ.200/–லிருந்து ரூ.500/– ஆக உயர்த்தி ஒப்பளிப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

- ❖ தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகளுக்கு பழுது மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்டுள்ள ரூ.1.04 கோடி உடன் கூடுதலாக ரூ.1.00 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- ❖ தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை பணியாளர்களின் பயிற்சி வசதிகளை நவீனப்படுத்தும் நோக்கில் செங்கல்பட்டு மாவட்டம் காலவாக்கத்தில், மாநில பயிற்சி கழகம்

நிறுவ கொள்கை அளவில் (in principle) முதற்கட்டமாக ரூ.19.30 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

❖ கிருஷ்ணகிரி மாவட்டம்–ஓசூர், செங்கல்பட்டு மாவட்டம்– தாம்பரம், மற்றும் இராணிப்பேட்டை மாவட்டம்–இராணிப்பேட்டை ஆகிய தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்கள் ரூ.2.51 கோடி செலவில் தரம் உயர்த்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

❖ சிவகாசியில் ஒரு நிலைய அலுவலர் மற்றும் 32 தீயணைப்போர்களுக்கும், சென்னை பெரும்பாக்கத்தில் 40 தீயணைப்போர்களுக்கும் ரூ.15.20 கோடி செலவினத்தில், குடியிருப்புகள் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

❖ தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் மீட்புப்பணிகளுக்கான மோப்ப நாய் படைக்கு நாய்க்குட்டிகள் வாங்கவும், எல்லை பாதுகாப்புப் படை (BSF) பயிற்சி மையத்தில் குட்டிகளை கையாள்வதற்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

❖ தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் பயன்பாட்டிற்கென சென்னை புறநகர் மாவட்டம் செங்குன்றத்தில் 53 குடியிருப்புகள் (3 அலுவலர்கள் மற்றும் 50 பணியாளர்கள்), தேனிமாவட்டம் போடிநாயக்கனூரில் 10 குடியிருப்புகள் (2 அலுவலர்கள் மற்றும் 8 பணியாளர்கள்), திருச்சி மாவட்டம் துறையூரில் 18 குடியிருப்புகள் (2 அலுவலர்கள் மற்றும் 16 பணியாளர்கள்), இராணிப்பேட்டை மாவட்டம், இராணிப்பேட்டையில் 19 குடியிருப்புகள் (2 அலுவலர்கள் மற்றும் 17 பணியாளர்கள்) என 100 குடியிருப்புகள் ரூ.2331.70 இலட்சம் செலவினத்தில் கட்டுவதற்கு நிதி ஒப்பளிப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

❖ ரூ.10.51 கோடி செலவினத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைக்கு கீழ்கண்ட சிறப்பு உபகரணங்கள் மற்றும் மீட்புப்பணிக்கு தேவையான உபகரணங்கள் மாநில பேரிடர்

நிவாரண நிதியிலிருந்து (SDRF) வாங்க ஒப்பளிப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

அ. மூச்சுக்கருவிகள் – 100

ஆ. காற்று பிடிக்கும் கருவிகள் – 4

இ. புகை வெளியேற்றும் கருவிகள் – 4

ஈ. மின்கலனில் இயங்கும் கோம்பி கருவிகள் – 5

உ. இறந்த மனித உடலை எடுத்துச்செல்லும் பைகள் – 500

ஊ. தீயணைப்பு வீரர்களை ஏற்றிச்செல்லும் வாகனம் (4 சக்கர வாகனம்) – 2

எ. வாட்டர் பௌசர் – 4

ஏ. சிறிய அவசர கால மீட்பு ஊர்தி – 2

ஐ. குறைந்த எடை கொண்ட ஹைட்ராலிக் கருவிகள் – 10

ஒ. நீர் நிறைந்த பகுதிகளில் மீட்புப்பணி மற்றும் கட்டட இடிபாடுகளில் மீட்புப்பணி மேற்கொள்ள சிறப்பு பயிற்சி, சிறப்பு பணிக்குழு (Special Task Force) பயிற்சி மற்றும் பாம்பு பிடித்தல் உட்பட விலங்குகள் மீட்புப்பணிகள் பயிற்சிக்கான உபகரணங்கள் – ரூ. 50.00 இலட்சம்.

❖ தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையில் கீழ்க்கண்ட 6 புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்கள் ரூ.10.71 கோடி செலவினத்தில் துவங்குதல்.

1. அன்னியூர் – விழுப்புரம் மாவட்டம்
2. திருப்பரங்குன்றம் – மதுரை மாவட்டம்
3. ஏழாயிரம் பண்ணை – விருதுநகர் மாவட்டம்
4. கொளத்தூர் – வடசென்னை மாவட்டம்
5. காலவாக்கம் – செங்கல்பட்டு மாவட்டம்
6. கண்ணமங்கலம் – திருவண்ணாமலை மாவட்டம்.

❖ தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையில் கீழ்க்கண்ட 6 புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்கள் ரூ.9.76 கோடி செலவினத்தில் துவங்குதல்.

1. ஆட்டையாம்பட்டி – சேலம் மாவட்டம்
2. ஊத்துக்குளி – திருப்பூர் மாவட்டம்

3. இளையான்குடி–சிவகங்கை மாவட்டம்
4. வையம்பட்டி – திருச்சி மாவட்டம்
5. குமராட்சி – கடலூர் மாவட்டம்
6. நைனார்பாளையம் – கள்ளக்குறிச்சி மாவட்டம்.

- ❖ தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்களில் உள்ள 39 நிலைய அலுவலர் பதவிகள் உதவி மாவட்ட அலுவலர் நிலைக்கு தரம் உயர்த்துதல்.
- ❖ கோயம்புத்தூரினை தலைமையிடமாகக் கொண்ட மேற்கு மண்டலத்தினை இரண்டாகப் பிரித்து சேலத்தினை தலைமையிடமாகக் கொண்டு புதிய மண்டலம் ஒன்று உருவாக்க ரூ.3.00 இலட்சம் தொடரும் செலவினம் மற்றும் ரூ.6.25 இலட்சம் தொடராச் செலவினத்திற்கு நிதி ஒப்பளிப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

## 18. நிறைவுரை

தீ பாதுகாப்பு தணிக்கை என்பது ஒரு நிறுவனம் அல்லது குடியிருப்பின் தீ பாதுகாப்பு தரங்களை மதிப்பிடுவதற்கான ஒரு பயனுள்ள காரணியாகும். ஒரு விரிவான தீ பாதுகாப்பு தணிக்கையால் ஒரு குடியிருப்பில் அன்றாட நடவடிக்கைகளுடன் தொடர்புடைய உள்ளார்ந்த தீ ஆபத்துக்களை நிவர்த்தி செய்யவும், தீ அபாயங்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளை பரிந்துரைக்கவும் சாத்தியமாகிறது. தீ சேவைகள் சட்டத்தை (Fire Services Act) சீரமைப்பதன் மூலம் அனைத்து உயர்மட்ட, நிறுவன மற்றும் பொதுமக்கள் அதிக அளவில் கூடும் கட்டடங்களும் தீ மற்றும் உயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்கான கட்டாய விதிகளை உருவாக்குவதன் மூலம் தற்போது நகர்புரங்களில் ஏற்படும் தீ விபத்துக்களை குறைக்க அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. தீயினால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில்

உள்ள தீயணைப்பு மற்றும் மீட்பு பணி நிலையங்களை வலுப்படுத்துவதன் மூலம் சமூகத்தில் தீ மற்றும் உயிர் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், தீயணைப்பு பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்களை வழங்குவதன் மூலம் தீயணைப்பு வீரர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் இந்த அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது.

**மு.க. ஸ்டாலின்,**
முதலமைச்சர்

## அட்டவணை –III


## மாவட்ட வாரியான தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள்

| வ. எண் | மாவட்டம் | நிலையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அரியலூர் | 3 |
| 2 | சென்னை (மெரினா மீட்புப்பணிகள் நிலையம் உட்பட) | 43 |
| 3 | கோயம்புத்தூர் | 13 |
| 4 | கடலூர் | 16 |
| 5 | திண்டுக்கல் | 10 |
| 6 | தருமபுரி (ஒரு மீட்புப் பணி நிலையம் உட்பட) | 6 |
| 7 | ஈரோடு | 11 |
| 8 | கரூர் | 4 |
| 9 | காஞ்சிபுரம் | 4 |
| 10 | செங்கல்பட்டு | 10 |
| 11 | கன்னியாகுமரி | 8 |
| 12 | கிருஷ்ணகிரி | 7 |
| 13 | மதுரை | 15 |
| 14 | நாகப்பட்டினம் | 14 |
| 15 | நாமக்கல் | 6 |
| 16 | நீலகிரி (ஒரு மீட்புப் பணி நிலையம் உட்பட) | 4 |

| வ. எண் | மாவட்டம் | நிலையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 17 | புதுக்கோட்டை | 13 |
| 18 | பெரம்பலூர் | 3 |
| 19 | ராமநாதபுரம் | 11 |
| 20 | சேலம் | 15 |
| 21 | சிவகங்கை | 7 |
| 22 | தஞ்சாவூர் | 9 |
| 23 | தேனி | 9 |
| 24 | திருவண்ணாமலை | 14 |
| 25 | திருச்சிராப்பள்ளி | 10 |
| 26 | திருவாரூர் | 12 |
| 27 | திருவள்ளூர் | 9 |
| 28 | தூத்துக்குடி | 10 |
| 29 | திருப்பூர் | 9 |
| 30 | திருநெல்வேலி | 8 |
| 31 | தென்காசி | 7 |
| 32 | வேலூர் | 5 |
| 33 | திருப்பத்தூர் | 5 |
| 34 | இராணிப்பேட்டை | 6 |
| 35 | விழுப்புரம் | 9 |
| 36 | கள்ளக்குறிச்சி | 8 |
| 37 | விருதுநகர் | 11 |
| | மொத்தம் | 364 |

# அட்டவணை - I

## தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப் பணிகள் துறை
## நிர்வாக அமைப்பு




குறிப்பு:- அடைப்புக் குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கை அந்தந்தப் பதவிகளில் உள்ளோர் எண்ணிக்கையினைக் குறிப்பதாகும்.

# <u>அட்டவணை –II</u>

## <u>மண்டலங்களின் கீழ் செயல்படும் நிலையங்கள் மற்றும் இதர அலகுகள்</u>

| வட மண்டலம் | தீமீபநி | தீதகு | மற்றவை |
|---|---|---|---|
| 1. வட சென்னை | 10 | 1 | 1* |
| 2. தென் சென்னை | 12 | 1 | 1* |
| 3. மத்திய சென்னை | 10 | - | - |
| மெரினா | 1 @ | | |
| 4. சென்னை புறநகர் | 10 | - | - |
| 5. வட மண்டலம் | | - | 2** |
| மொத்தம் | 42+1@ | 2 | 4** |

| வடமேற்குமண்டலம் | தீமீபநி | தீதகு |
|---|---|---|
| 1. வேலூர் | 5 | 1 |
| 2.திருப்பத்தூர் | 5 | |
| 3.இராணிப் பேட்டை | 6 | |
| 4. திருவண்ணா மலை | 14 | - |
| 5. காஞ்சிபுரம் | 4 | 1 |
| 6.செங்கல்பட்டு | 10 | |
| 7. திருவள்ளூர் | 9 | - |
| மொத்தம் | 53 | 2 |

| மத்திய மண்டலம் | தீமீபநி | தீதகு |
|---|---|---|
| 1.திருச்சிராப்பள்ளி | 10 | 1 |
| 2.புதுக்கோட்டை | 13 | 1 |
| 3.தஞ்சாவூர் | 9 | - |
| 4.நாகப்பட்டினம் | 14 | - |
| 5.கடலூர் | 16 | - |
| 6.விழுப்புரம் | 9 | - |
| 7.கள்ளக்குறிச்சி | 8 | |
| 8.கரூர் | 4 | - |
| 9.பெரம்பலூர் | 3 | - |
| 10.திருவாரூர் | 12 | - |
| 11.அரியலூர் | 3 | - |
| மொத்தம் | 101 | 2 |

| தெற்கு மண்டலம் | தீமீபநி | தீதகு |
|---|---|---|
| 1. மதுரை | 15 | - |
| 2.திருநெல்வேலி | 8 | - |
| 3.தென்காசி | 7 | |
| 4 கன்னியாகுமரி | 8 | - |
| 5. தூத்துக்குடி | 10 | - |
| 6.விருதுநகர் | 11 | 1 |
| 7.இராமநாதபுரம் | 11 | - |
| 8.சிவகங்கை | 7 | |
| 9.தேனி | 9 | - |
| மொத்தம் | 86 | 1 |

| மேற்கு மண்டலம் | தீமீபநி | தீதகு |
|---|---|---|
| 1.கோயம்புத்தூர் | 13 | 1 |
| 2.ஊட்டி | 3 | - |
| கோத்தகிரி | 1@ | |
| 3.ஈரோடு | 11 | 1 |
| 4.திருப்பூர் | 9 | 1 |
| 5.சேலம் | 15 | 1 |
| 6.தருமபுரி | 5 | 1 |
| ஒகேனக்கல் | 1@ | |
| 7.கிருஷ்ணகிரி | 7 | - |
| 8.திண்டுக்கல் | 10 | 1 |
| 9.நாமக்கல் | 6 | - |
| மொத்தம் | 79+2@ | 6 |

மொத்த தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களின் எண்ணிக்கை 361+3@

<u>பிற நிறுவனங்கள்</u>

| | |
|---|---|
| மாநில பயிற்சி மையம் | 1 |
| மாநிலப் பட்டறை | 1 |
| மீட்புப் பணி நிலையம் | 3@ |
| மோப்பநாய் படை | 1 |
| இசை மேளக்குழு | 1 |

குறிப்பு– தீமீபநி : தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம்

தீதகு: தீத்தடுப்புக் குழு

மற்றவை:

*புகைப்படப் பிரிவு

**தீக்கட்டுப்பாட்டு அறை மற்றும் வான்தந்திப் பிரிவு




மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 10.04.2023 அன்று புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டன.



காகிதப் பொருட்கள் சேமிப்பு கிடங்கில் ஏற்பட்ட தீயை அணைக்கும் பணி



திரைப்பட அலங்காரப் பொருட்கள் சேமிப்பு கிடங்கில் ஏற்பட்ட தீயை அணைக்கும் பணி



அரசு பன்னோக்கு மருத்துவமனையில் நடைபெற்ற தீத்தடுப்பு ஒத்திகை நிகழ்ச்சி




மீட்புப் பணிகள் குழு - சென்னை மெரினா கடற்கரை



நீர்தாங்கி ஊர்தி



சிறியரக நீர்தாங்கி ஊர்தி



அவசரகால மீட்பு ஊர்தி



வான்நோக்கி உயரும் ஏணி கொண்ட ஊர்தி



தண்ணீர் பெரும லாரி

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் வாகனங்கள்



இந்திய ஆயுள் காப்பீட்டு கழக அலுவலக கட்டடத்தில் ஏற்பட்ட தீயை அணைக்கும் பணி

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.